1981 மே 8]

Thiru K. RAMANI : I have not asked the Hon. Deputy Speaker to compel the Hon. Minister to reply. The Hon. Minister is bound to give a reply. According to our rules, the Hon Minister is bound to give a proper reply to the question put.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நான் ஏற்கனவே இது குறித்து தீர்ப்புச் சொல்லிவிட்டேன். அந்தக் கேள்வி முடிந்து அடுத்த கேள்விக்குப் போய், அதற்கும் பதில் சொல்லியாகி விட்டது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் தயவுசெய்து உட்கார வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற நடவடிக்கைகளிலேயே கேள்வி நேரம் என்பது முக்கியமான ஒரு நேரமாகும். பல தகவல்கள் பெறுவதற்கும், தேவையான விளக்கங்களை அமைச்சர்களிடத்தில் இருந்து பெறுவதற்கும் இது ஒரு முக்கியமான நேரமாகும். மேலும், இங்கே வருகின்ற வினாக்கள் போடப்பெற்று, நீண்ட நாட்கள் சென்ற பின்னரே, அதற்கான பதில்கள் இங்கே வருவதால், மாண்புமிகு உறுப்பினர்கள் நிறைய விளக்கங்களை அமைச்சர்களிடத்தில் இருந்து பெறுவதற்கு விரும்புகிறார்கள். அப்படி விளக்கங்கள் கேட்கின்ற நேரத்தில், மாண்புமிகு அமைச்சர்கள் அதற்கான விளக்கங்களைத் தர இயலவில்லை என்றால், விவரங்கள் தற்போது இல்லை, பின்னர் சேகரித்துத் தருகிறேன் என்று சொல்லலாம். அது உறுப்பினர்களுக்கு ஆறுதல் அளிக்கக்கூடியதாக இருக்கும். அது சம்பந்தமான முறையில் மாண்புமிகு அமைச்சர்கள் பேசினால் உதவிகரமாக இருக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேட்ட கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார். இப்படித் தான் அவர் பதில் சொல்லவேண்டும் என்று உறுப்பினர்கள் எதிர் பார்ப்பது சரியல்ல. இது ஒரு நல்ல முன்மாதிரி இல்லை. ஆகவே, இந்தப் பிரச்னையை இத்தோடு முடிக்கிறேன்.

வெள்ளைகல் நீர்த்தேக்கத் திட்டம்

* வினா எண். 958—திரு. ந. குலசேகர பாண்டியன்: மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம் வாணியம்பாடி தாலுக்கா, வெள்ளைகல் நீர்த்தேக்கத் திட்டம் பற்றிய செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?

[1981 மே 8

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) மற்றும் (ஆ) : வடஆர்க்காடு மாவட்டம், வாணியம்பாடி வட்டத்தில் வெள்ளைகல் நீர்த்தேக்கத் திட்டம் முதல் நிலை ஆய்வில் உள்ளது. இத்திட்டம் பாலாறு வடிநிலத்தில் அமைந்துள்ளது. பாலாற்றில் போதிய உபரிநீர் இல்லாததால் மூன்று ஆண்டுகளாக நீர் அளவைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. குறைந்தது 5 ஆண்டுகளாவது நீர் அளவைகள் எடுத்து, உபரிநீர் இருப்பதாகத் தெரிந்தால் மேற்கொண்டு ஆய்வு செய்ய எடுத்துக் கொள்ளப்படும் என்று தலைமைப் பொறியாளர் (ஆய்வு) தெரிவித்துள்ளார்.

திரு. ந. குலசேகர பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம் ஏறத்தாழ பல கிராமங்கள் பயன் அடையும். தற்போதுள்ள வறட்சி நிலையில் கூட அங்கேயுள்ள கிட்டத்தட்ட 15 கிராமங்களுக்கு தேவையான நீர் வற்றாமல் கிடைத்து வருகிறது. அந்த அளவிற்கு ஒரு மிகப்பெரிய வாய்ப்பு இருப்பதால், அந்தப் பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாக இருந்து வருகின்ற இந்தத் திட்டத்தை நிறைவேற்ற அரசு முன் வர வேண்டும். மேலும், இதிலே வருகின்ற நீரின் மூலம் பாலாற்றின் நீர் அதிகப்படுவதற்கோ அல்லது இல்லாமல் போவதற்கோ வாய்ப்பு இல்லை என்பதால், அந்தப் பகுதி மக்களின் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு, இந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற அரசு முன் வருமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, பாலாற்று வடிநிலத்தில் இந்த அணைக்கட்டு கட்ட வேண்டிய நிலைமை இருப்பதால், போதிய நீர் கிடைக்குமா என்ற கேள்வி எழுந்துள்ளது. ஏற்கனவே கடந்த 3 ஆண்டுகாலமாக நீர் அளவு எடுக்கப்பட்டு வருகிறது. ஏறத்தாழ ஒரு 5 ஆண்டு அல்லது 10 ஆண்டு நீர் அளவு ஒரு நீர்த்தேக்கத் திட்டம் நிறைவேற்றுவதற்கு முன்பு எடுக்க வேண்டும் என்று சொல்கிறார்கள் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு மிகுந்த அக்கறை காட்டுவதால் ஏறத்தாழ 5 ஆண்டு கணக்கு எடுத்த பிறகு இது குறித்து பரிசீலிக்கலாம். இன்னும் 2 ஆண்டுகள் நீர் அளவு எடுத்தபின், இந்தத் திட்டத்தை எடுத்துக் கொள்வதைப் பற்றிப் பரிசீலனை செய்யலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ந. குலசேகர பாண்டியன் : துணைத் தலைவரவர்களே, இந்தத் திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு என்று எப்போது வந்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : துணைத் தலைவரவர்களே, 1978–79 விலைவாசி கணக்கின்படி 106 இலட்சம் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

1981 மே 8]

திரு. ஏ. சி. சண்முகம் : துணைத் தலைவரவர்களே, வறட்சியும் வெள்ளமும் தமிழகத்தில் மாறி மாறி வருகின்ற சூழ்நிலை இருக்கிறது. ஆகையால் நிரந்தர பாசன வசதி அளிக்க ஆங்காங்கே அணைகள் கட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு வடாற்காடு மாவட்டத்தில் செண்பகத் தோப்பு அணை கட்ட இதுவரையில் பணி தொடங்கப்பட வில்லை. அந்த பணியைத் தொடங்க துரித நடவடிக்கை எடுக்கப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : துணைத் தலைவரவர் களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்ல வசதியாக இருக்கும்.

வெள்ளாகுளம் பகுதியில் புதிய பாசனக் கண்மாய் அமைக்கும் திட்டம்

* வினா எண். 959— திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு நீர்ப் பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட விளாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் வட்டம், வெள்ளாகுளம் என்ற இடத்தில் ஒரு புதிய பாசனக் கண்மாய் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அப் பணி எந்நிலையிலுள்ளது?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) மற்றும் (ஆ) : திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் வட்டம் வெள்ளாகுளம் கிராமத்தருகே ரூ. 5.60 லட்ச மதிப்பீட்டில் ஒரு புதிய கண்மாய் அமைக்கும் திட்டத்திற்கு நடப்பு ஆண்டு ஜனவரி மாதம் அரசு ஒப்புதல் அளித்துள்ளது. திட்ட வேலை விரைவில் தொடங்கப்படும் என சிறுபாசனத் தலைமைப் பொறியாளர் தெரிவித்துள்ளார்.

திரு. சோ. அழகர்சாமி : துணைத் தலைவரவர்களே, இந்த சங்கரன்கோவில் வட்டம், வெள்ளாகுளம் என்ற இடத்தில் அமைக்கப்படும் பாசனக் கண்மாய் ஆயக்கட்டில் வரக்கூடிய மொத்த நிலப்பரப்பு எவ்வளவு இந்த வேலைகளைச் செய்ய ஒப்பந்தப் புள்ளிகள் எல்லாம் கேட்கப்பட்டு விட்டனவா? இன்னும் காண்ட்ராக்ட் விடப்படவில்லை என்றால் எவ்வளவு காலத்திற் குள் வேலை தொடங்கும்? இப்போது வறட்சியாக இருப்பதால் இந்த வேலையை உடனடியாகத் தொடங்கினால் வறட்சி நிவாரணப் பணியாகவும் அமையும். ஆகவே உடனடியாக வேலையைத் தொடங்க அரசு முன்வருமா?